செயற்குறிப்பு ஒன்று, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்களால் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பல இலாக்காக்களும் பல கட்டங்களில் தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றனர்.

திரு. எம். தேவராசன்: நீலகிரி மாவட்டத்தில் பெருமளவில் பார்லி கிடைப்பதால் அங்கே ஒரு பீர் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா? அரசுக்கு உத்தேசமில்லையென்றால், தனியார் யாராவது ஆரம்பிக்க முன்வந்தால் அதற்கு அரசு ஆதரவு கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேள்வி, திராட்சையைப் பற்றியது; பார்லியைப்பற்றியதல்ல.

திரு. அ. முனியாண்டி: நிலக்கோட்டை தொகுதியில் அதிகமாக திராட்சை கிடைப்பதால் திண்டுக்கல்லில் அமைக்கும் தொழிற்சாலையை நிலக்கோட்டையிலேயே அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மதுரை மாவட்டத்தில் கொடைக்கானலில் விளைகிற திராட்சையை மூலப் பொருளாகக் கொண்டு, அங்கே போதைச் சத்து அடங்கிய "ஒயின்" தயாரித்தால் 12 சத வீத சத்து அடங்கியதாக இருக்கலாம் என்கிற அளவுக்கு சில குறிப்புகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி இன்னும் அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

* 572 Q.--THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state the number of licences issued for the manufacturing of brandy and liquor from cashaw apple.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏதுமில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: முந்திரிக்கொட்டை ஓடுகளிலிருந்து ஒரு உயர்தரமான பிளாஸ்டிக் தயாரிப்பதற்கான வசதி இருப்பதாகவும், அதற்கு மேல்நாடுகளில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும் கூறப்படுகிறதே, அப்படிப்பட்ட தொழிற்சாலையை இங்கே ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முந்திரிப் பழத்திலிருந்து மது தயாரிப்பதைப்பற்றியது, மூலக்கேள்வி.

1972 மார்ச் 20]

திரு. நா. வீராசாமி : முந்திரிப் பழத்திலிருந்து மது தயாரிக்கும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இன்றையதினம் பல விதமான சாராயங்களைக் குடித்து மக்கள் இறந்துபோகிறார்கள். இதற்குக் காரணம், உயர் ரக பானங்களைக் குடித்தும் போதை ஏறவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, முந்திரிப் பழத்திலிருந்து தயாரிக்கப்படுகிற பிராந்தி அதிகமான போதை தருவதாகவும், அதிலிருந்து தயாரித்தால் மக்கள் அதையே அருந்தி பழகி விடுவார்கள், கண்டதைக் குடிக்கமாட்டார்கள் என்று சொல்லப் படுகிறதே, அதை உத்தேசித்து இனிமேலாவது இப்படிப்பட்ட தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் செயற்குறிப்புபற்றி எதுவும் சொல்லவில்லை. முந்திரியிலிருந்து பிராந்தியும் மதுவும் தயாரிப்பதற்கு வழங்கப்பட்ட உரிமங்களுடைய எண்ணிக்கை மூலக் கேள்வியில் கேட்கப்பட்டிருந்தது. அதற்கு "எதுவும் இல்லை" என்று பதில் சொன்னேன். இப்பொழுது முந்திரியிலிருந்து மது தயாரிப்பதைப்பற்றி வருவாய்த் துறை, தொழில் துறை, விவசாயத் துறை, வனத் துறை ஆகிய இந்த நான்கு துறைகளும் அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றன. பொதுவாக, அரசாங்கத் தினுடைய பல இலாக்காக்கள் பல பரிசீலனைகளைச் செய்வதென்பது எப்போதும் தவிர்க்க முடியாதவை. ஆகவே, அதுபற்றி விரைவில் எந்த முடிவும் எடுக்க இயலவில்லை.

திரு. என். கிட்டப்பா : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். எதிர்க்கட்சி வரிசையில் தலைவர்கள் யாருமே காணோம். அதைப் பற்றி அவைத் தலைவர் அவர்கள் ஏதேனும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Krishnagiri taluk in Dharmapuri district is noted for grape production and grape production is increasing now. May I know from the Hon. Chief Minister whether a grape juice production unit will be started in Krishnagiri?

[1972 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திராட்சை முடிந்து முந்திரிக்கு வந்திருக்கிறோம். இருந்தாலும், திராட்சையிலிருந்து மது தயாரிக்கும் தொழிற்சாலையை தர்மபுரி சார்புடைய இடங்களில் அமைப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருவதாக முன்பே நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. எஸ். காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி: கோவை போன்ற இடங்களில் முந்திரியிலிருந்து மது தயாரிக்கப்பட்டு பங்களூர் போன்ற பகுதிகளில் நல்ல விற்பனை ஆகிறது. விலையும் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நமது மாநிலத்தில் வரவழைத்து விற்பதற்கு உரிமம் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி எந்த விதமான நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற முந்திரியைப் பயன்படுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. சதாசிவம்: முந்திரி, திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம் தாலூக்காவிலும், அரியலூர் தாலூக்காவிலும் அரசாங்கக் காடுகளும், தனியார் காடுகளும் மிகுதியாக இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதியில் முந்திரி ரசம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் முந்திரியிலிருந்து மது தயாரிப்பது ஏற்றதா என்கிற ஆராய்ச்சியே இன்னும் முடியாமலிருக்கும்போது, எந்த இடத்தில் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவது என்பதைப்பற்றி நான் இப்பொழுது பதில் அளிக்க இயலாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்பொழுது நமது மாநிலத்தில் விற்பனையாகின்ற வெளிநாட்டு மதுப் பொருள்கள்—ஃபாரின் டேஸ்ட் லிக்கர் என்று அவற்றுக்கு விலாசம் இருக்கிறது—எங்கிருந்து வரவழைக்கப் படுகின்றன என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்த விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு) தனிக் கேள்வி போட்டால், தெரிந்துகொண்டு பதில் அளிக்கிறேன்.